<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண். 309/2022

இன்று 2024 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 10ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கே.ஆர்.கண்ணன், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : லட்சுமி

கணவர் பெயர் : கிருஷ்ணமூர்த்தி

வயது : 45

<u>முதல் விசாரணை</u>

வாதி ஆஜர். 3ம் பிரதிவாதி ஆஜர் இல்லை. வாதி மற்றும் 3ம் பிரதிவாதி, அரசு தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். தாவாவில் நான் 1ம் வாதி.

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

வாதி பெயரிலுள்ள குடும்ப அட்டை ஒளி நகல் **வா.சா.ஆ.1** (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது)

32.06.2014 – 2ம் வாதியின் பள்ளி மாற்றுச் சான்றிதழ் ஒளி நகல் **வா.சா.ஆ.2** (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது)

30–10–2018 – கிருஷ்ணமூர்த்தி இறப்புச் சான்றிதழ் கணினி நகல் **வா.சா.ஆ.3** ஆகும்.

11–03–2020 – கிருஷ்ணமூர்த்தி வாரிசுச் சான்றிதழ் கணினி நகல் **வா.சா.ஆ.4** ஆகும்.

23–08–2020 – வெங்கடாசலம் இறப்புச் சான்றிதழ் ஒளி நகல் **வா.சா.ஆ.5** ஆகும்.

10–3–2011 – சரஸ்வதி இறப்புச் சான்றிதழ் ஒளி நகல் **வா.சா.ஆ.6** ஆகும்.

28.11.2014 – கிருஷ்ணமூர்த்தி பெயரிலுள்ள எல்.ஐ.சி. பாலிசி அசல் **வா.சா.ஆ.7** ஆகும்.

07–07–2018 – வாதிபெயரிலுள்ள மருத்துவ அட்டை ஒளி நகல் **வா.சா.ஆ.8** ஆகும்.(அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது)

பிரதான் மந்திர் சன் யோஜனா திட்டம் படிவம் அசல் **வா.சா.ஆ.9** ஆகும்.

1 மற்றும் 2 வாதிகளின் ஆதார் அட்டை ஒளி நகல் **வா.சா.ஆ.10** ஆகும்.
(அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது)

02.05.2019 – 1ம் வாதி மாநகராட்சி ஆணையாளருக்கு கொடுத்த மனுவின் ஒளி நகல் **வா.சா.ஆ.11**

10–06–2023 – திருப்பூர் வருவாய் கோட்டாட்சியரின் செயல்முறை ஆணைகள் **வா.சா.ஆ.12**

21.09–2022 – 1ம் பிரதிவாதி ஏற்படுத்திய உத்தரவின் கணினி நகல் **வா.சா.ஆ.13**

தாவாப்படி தீர்ப்பாக கேட்டுக் கொள்கிறேன்.

குறுக்கு விசாரணை அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/– K.R.Kannan

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருப்பூர்.